PUBLIC LIBRARY
JAFFNA

The Morning Star
CACM Central Office
"Asia House"
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

# உதய தாரகை
# The Morning Star

A Christian Publication Established 1841

Vol. 174 - Jaffna - March 2013 . No.1

Righteousness Exalteth A Nation.
But Sin is a Reproach to any people.

Subscription Rs.20/=
(postage Include)
Please send your News & Articles to
The Editor
The Morning Star,
"Asia House"
Maruthanarmadam,
Chunnakam.
Email:
thecacmmorningstar@gmail.com

# உயிர்த்தெழுந்த ஆண்டவர் மரணம் வென்றவர்
# இறையரசின் மக்களுக்கு உதவி செய்பவர்



## Real Peace is not absence of War But its the Presence of God

### அமைதி/சமாதானம் என்பது போரற்ற நிலையன்று அது கடவுள் நம்மோடு இருக்கின்ற நிலை

அன்று வாரத்தின் முதல் நாள் அது மாலை வேளை. யூதர்களுக்கு அஞ்சி சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடி வைத்திருந்தார்கள். அப்பொழுது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று 'உங்களுக்கு அமைதி உரித்தாகுக!' என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பிது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார் - (யோவான்:-20:19-21)

இயேசு உலகில் வாழ்ந்த காலத்தில் சீடர்களுக்கு இறையரசின் தன்மைகளையும் அது வழங் கவுள்ள நிரந்தர அமைதியையும் குறித்து தனது கற்பித்தல் மற்றும் பணி மூலம் பல தகவுகளை வெளிப்படுத்தினார். ஆனால் இயே சுவோடு ஒன்றாக இருந்தும் அவர் போதனைகளைக் கேட்டும் அவருடைய சாதனைகளைக் கண்டு ணர்ந்தும் சீடர்கள் இயேசுவுடைய சிலுவை மரணத்தை ஏற்கவோ அவர் வழியில் பாடுகளை அனுபவிக்கப் பயந்தவர்களாய் யூதர்களின் செயற் பாடுகளுக்கு அஞ்சி தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள்.

### வெறுமையான கல்லறை

மரியாள் திறந்த கல்லறையைக் க்ண்டு அங்கு இயேசுவின் உடலைக் காணாது பதைபதைத்துக் கலங்கி அழுத வேளை தூதர்கள் ஏன் அழுகின்றீர்கள் எனக் கேட்க, அவர் ஆண்டவரின் உடலைக் காணவில்லை எனக் கூறிவிட்டுத் திரும்பிப்பார்க்க இயேசு அவர் முன் நின்றார். அவர் இயேசு தான் நிற்கிறார் என அறியாது நின்றபோது இயேசு அவரிடம் ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்? என்று கேட்டார். மரியாள் அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம் ஐயா! நீர் அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் என்று சொல்லும், நான் அவரை எடுத்துச் செல்வேன் என்றார். இயேசு அவரிடம் 'மரியா' என்றார். மரியா திரும்பிப் பார்த்து 'ரபூனி' என்றார். இந்த எபிரேயச் சொல்லுக்கு 'போதகரே' என்பது பொருள் - (யோவான்:-20:11-16)

இன்று நாம் உயிருள்ள கிறிஸ்துவை உயிரற்றவர்களாய்த் தேடுகின்றோம். உடல் இருக்கும் இடத்தைச் சொன்னால் எடுத்துச் செல்வோம் என மரியாள் போன்று வேதனைப்பட்டடுக் கூறி அழுகி றோம். உயிர்த்த ஆண்டவரை எமது வாழ்வில் செயல்படுத்தாமல் உயிரற்ற உடலை கல்லறையில் தேடி அழுது கொண்டு நம்பிக்கையற்றவர்களாய் நடைப்பிணங்களாய் வாழ்கின்றோம். இன்று உலகின் கொடுமைகளால் அழுகின்ற பெண் இனத்துக்கு ஏன் அழுகிறாய்? எனக்கேட்டு உயிர்த்த ஆண்டவர் பெயர் சொல்லி அழைத்து ஆறுதல் அளிக்கிறார். உயிர்த்த ஆண்டவரின் ஆறுதலை உலகிற்குள் அவர் சீடர்களாக எடுத்துச் செல்ல அழைக்கப்படுகின்றோம்.

### திறந்த கல்லறை

'ஓய்வு நாள் முடிந்ததும் மகதலா மரியா, யாக்கோபின் தாய் மரியா, சலோமி ஆகியோர் அவரது உடலில் பூசுவதற்கென்று நறுமணப் பொருள்கள் வாங்கினர். வாரத்தின் முதல் நாள் காலையில் கதிரவன் எழும் வேளையில் அவர்கள் கல்லறைக்குச் சென்றார்கள். கல்லறையின் வாயிலில் இருந்த கல்லை நமக்கு யார் புரட்டுவார்? என்று அவர்கள் ஒருவரோடொருவர் கேட்டுக் கொண்டார்கள். (மாற்கு:-16:1-3).

இயேசுவின் கல்லறை கல் புரட்டப்பட்ட திறந்த கல்லறை. எமது வாழ்வின் நடைபிண செயற்பாடுகள் என்னும் கல்லை யார் புரட்டுவார்? என்று ஏங்கித் தவிப்பவர்களுக்கு இயேசுவின், கல் புரட்டப்பட்ட திறந்த கல்லறை துன்பமான, செயற்பட முடியா வாழ்வின் நடைபிணத் தன்மையை நீக்கச் செயற்படும் வாழ்விற்கு நம்பிக்கை தருகிறது. மனித வாழ்வின் மரண பயத்திற்கு உயிர்ப்பின் உந்துதல் சக்தியாகப் பரிணமித்து நிற்கிறது.

(2ம் பக்கம் தொடரும்)

## Annual Kid's Sports and Opening Ceremony of the Renovated Pre-School Building

*Murasumoddai, Kilinochchi.*





*As part of its commitment to rural community programs, the Church of the American Ceylon Mission has a mission center in Murasumoddai, Kilinochchi, in Kanadvalai DS division. Since early 1950s medical care and later educational empowerment programs were provided by the mission center. Due to war the building complex was severely damaged in 2009. In spite of the challenges posed by such loss the CACM started early childhood care center on May of the 2010.*

*Currently the children of nearby villages such as Uriyan, Korakankaddu and Murasumoddai get nutritional support and early learning at the center with the support of the CACM church, Colombo. In 2012 with the generous support of Serendib Children's Home, UK, the building for the pre-school was substantially renovated enabling the programs there to continue throughout the year including the rainy season.*

*On 6th of the April, 2013 at 3.30 the renovated mission center was officially opened. The Officers of the CACM, along with pastors of the region, and official representatives the Colombo church and local community members participated in the event. Rev D.S Mathiyaparam who is the manager of the center, and Mr. T.Juthraj the project coordinator for the Wanni regions coordinated the event.*

## இரத்த தானம்

உயித்தெழுந்த நாளை முன்னிட்டு உயிர்தெழுந்த ஞாயிற்றுக் கிழமை காலை ஆராதனையைத் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஊடாக குருதிக் கொடை நிகழ்வு ஒன்று உடுவில், சத்தியபுரத்தில் உள்ள தூய.பவுல் ஆலயத்தில் திருச்சபை ஊழியன் வண.S.ரிச்சர்ட் சதீஸ்குமார் தலைமையில் இடம் பெற்றது. திருச்சபையைச் சேர்ந்த 7 பேரும் குருவானவரும் இரத்த தானம் செய்தனர். இத்திருச்சபையில் இவ்வாறான நிகழ்வு இடம்பெற்றது இது முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரகை ஒளி வீச்சு

## வன்முறைக்கு முற்றுப் புள்ளி உயிர்ப்பு

அன்பின் உறவுகளே!

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புத் திருநாள் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கிறிஸ்தவப் பயணம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில் வளர்ந்து வந்த ஒன்று. அதனால் தான் 'இயேசு உண்மையிலேயே உயிர்க்கவில்லை, அவரது சீடர்கள் இரவில் வந்து அவரது உடலை திருடிக்கொண்டு போய்விட்டு உயிர்த்தார் என்று சொல்லுகிறார்கள்' என்று இயேசுவின் எதிரிகள் கட்டவிழ்த்துவிட்ட பொய்மூட்டைகள் நீண்ட நாட்கள் மக்களிடையே நிலைக்காமல் போய்விட்டது. காரணம் படைவீ ரர்களின் வார்த்தையிலும் பார்க்க இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் மக்கள் அவர் மீது கொண்ட நம்பிக்கை. பயந்திருந்த மக்களை உயிர்ப்பித்தது.

இந்த உயிர்ப்பு வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இயேசுவின் சிலுவைப்பாதை அல்லது சிலுவைப் பாடுகள் ஓர் வன்முறை. மனித உரிமை மீறலின் உச்சம். இன்று வீட்டில் நாட்டில் அரசியலில் சமூகங்களிடையில் நடைபெறும் வன்முறை அன்று அரங்கேறியது. அதன் செயல் வடிவம் தான் குற்றமற்றவர் குற்றுயிராக்கப்பட்டார்.

இயேசுவை ஒழித்துவிட வேண்டும், அவரது வாழ்வை கல்லறைக்கு இரையாக்க வேண்டும் என வரிந்து கட்டியவர்கள் நேருக்கு நேராக எதிர்க்க முடியாமல் இறைச்சட்டத்தையும் வேத நூல்களையும் மேற்கோள் காட்டி குற்றங்களை அடுக்கி அப்பாவியை ஆணிக்கு இரையாக்கினார்கள்.

நீதி குழி தோண்டிப் புதைக்கப்படும் போது மனித உரிமை மீறப்படுகின்றது. வன்முறை உருவெடுக்கின்றது. இது தான் இயேசுவின் சிலுவைச் சாவுக்குக் காரணம்.

வன்முறையின் வடிவத்தையும் மனித உரிமை மீறலின் உருவாக்கத்தையும் மத்:-27:27-31 இல் காணலாம். இயேசுவின் ஆடைகளைக் களைந்தார்கள், தலையில் முள் முடி, ஏளனம் செய்தல், தலையில் அடித்தல், துப்புதல், இழுத்துச் செல்லல் இவையெல்லாம் வன்முறையின் உச்சம், கொலை வெறியின் வடிவம். இதனால் தான் லூக்கா:-23:31ல் 'பச்சை மரத்துக்கே இப்படிச் செய்கின்றார்கள் என்றால் பட்ட மரத்துக்கு என்ன தான் செய்ய மாட்டார்கள்?' என்ற இயேசுவின் அவலம் புரிகிறது.

இநத வன்முறைக்கு யாரும் முகம் கொடுக்க முடியவில்லை. வன்முறையாளர்கள் பழிக்குப் பழி என்ற பாதகச் செயலை செய்த வண்ணம் உள்ளனர். இதனால் சீடர்கள் எல்லாரும் தலைமறைவு. பேதுரு மறுதலிப்பு. தாய் மரியினால் அழத்தான் முடிந்தது. இயேசுவை ஓரளவு அறிந்த அபலைகளாக அழும் எருசலேம் மகளிர். இது தான் வன்முறையினால் எற்பட்ட எச்சங்கள்.

இந்த எச்சங்கள் தான் இன்றும் சொல்கின்றது 'அவர் இங்கே (கல்லறையில்) இல்லை. உயிர்த்தெழுந்தார். இதற்கு நாங்கள் சாட்சிகள் என பேதுரு ஆணித்தரமாக கூறுகின்றார்.

சாவுக்குப் பின் வாழ்வு உண்டு. இதனை எந்த வன்முறையாளர்களாலும் தடுக்கமுடியாது. பறிக்கவும் முடியாது.

வாழும்போது நாலுபேரை வாழ வைத்தால் கல்லறைக்குப் பிறகும் எங்களின் வாழ்க்கைத் தொடரும். ஏழைக்கு இரக்கம் காட்டுகிறவன் கடவுளுக்கு கடன் கொடுக்கிறான் என்ற மறைவாசகம் எம்மை வாழ வைக்கும்.

யாருக்கும் பயனளிக்காமல் வாழ்ந்துவிட்டு போய் சேர்ந்த பிறகு புண்ணியம் தேட முயற்சிப்பது முட்டாள் தனம். இருக்கின்ற போதே மறுவாழ்வுக்கு ஆயத்தம் செய்வது மேல். உள்ளதையெல்லாம் அள்ளி வழங்குவது புண்ணியம் இல்லை. வாழும்போதே கண்ணியமாக வாழ்வதே. முதல் புண்ணியம் மனித மாண்புகளை நிலைபெறச் செய்வதும் மனித உரிமைகளை கட்டிக் காக்கும் போது கடவுளின் கடைக்கண் பார்வை நம்மீது விழும். நீதியை நிலைநாட்டுகிற வேட்கை இருக்க வேண்டும். அடி தடிகளால் ஆண்டவரின் அரசில் நுழையமுடியாது. அமைதியின் தூதர்களாக சமூகங்களில் உலா வரவேண்டும். தோள் வலிமை கொண்டவர் என்பதற்காக வறியவரை வதைத்திட ஒரு நாளும் நினைக்கக் கூடாது. சமூக அமைதியை ஒருபோதும் குலைத்திட முயலக் கூடாது. சமூக வன்முறைகள் நிகழும்போது சிலுவைப் பாடுகள் அல்லது சிலுவைப் பாதை தொடர்கின்றன. சிலுவைப் பாடுகள் நடைபெறுவதனால் உயிர்த்தெழுதல் நம் வாழ்வில் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. உயிர்த்த இயேசுவை நம் வாழ்வி ல் அனுபவிப்போம். பலருடன் பகிர்ந்து கொள்ள ஆயத்தமா? உயிர்ப்புக்கு நானும் நீங்களும் சாட்சியா?

DSM

## உயிர்த்தெழுந்த ஆண்டவர்......................

### கருவறையான கல்லறை

அவர் அவர்களிடம், 'திகிலுறவேண்டாம், சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் இங்கே இல்லை. இதோ அவரை வைத்த இடம். நீங்கள் புறப்பட்டுச் செலலுங்கள். பேதுருவிடமும் மற்றச் சீடரிடமும், 'உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறார், அவர் அவர் உங்களுக்குச் சொன்னது போலவே அவரை அங்கே காண்பீர்கள்' எனச் சொல்லுங்கள் என்றார். (மாற்கு:-16:6,7)

உயிர்த்த இயேசுவின் கல்லறை புதிய மானிடத்தினைப் பெற்றெடுத்த கருவறையாக மாறுகிறது. வாழ்வு மரணத்தில் முடிவடைகிறது என்ற நம்பிக்கை தகர்க்கப்பட்டு இறைவனுடன் வாழும் நித்திய வாழ்வுக்கு மனித குலத்தை பெற்றெடுக்கும் சின்னமாகிறது.

அவர் இறந்தது பாலவே நாமும் 'அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில் அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்' - (உரோமர்:-6:5)

இன்று எமது நாட்டின் சூழல் மரண பயத்தோடு நடைபிணங்களாக நடமாடி பூட்டிய அறைகளில் பயத்தோடு வாழும் நம் மத்தியில் அன்று சீடர்களுக்கு பூட்டிய அறையில் தரிசனமாகி உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று கூறிய உயிர்த்த இயேசு எம் மத்தியிலும் எம் உள்ளத்திலும் இல்லத்திலும் உங்களுக்கு அமைதி என்று கூறி நிற்கின்றார்.

சாவை தமது சாவாமையால் வென்று உயிர்த்த ஆண்டவரின் சமாதானம்/அமைதி உங்களுடன் இருப்பதாக.


அருட்திரு.ஈனோக் பூ. புனிதராஜா
தலைவர்
CACM

## Christine Barratt visits Eastern Region

*Ms Christine Barratt who is a member of the Small Act of Kindness (SAOK), Donor agency in London, England. She visited and discussed with beneficiaries of projects of the CACM in Eastern region from 26th of March- 30st of March 2013. She expressed "It is hard to put into words how amazing these projects are, you are some of the most generous, practical people I have ever met and you are making an incredible difference in the world. I had most special days have with you all" while discuss with staffs of St Andrew's Church, Periyaneelavani on 27th of March. There she met the children of the Herman's Girls home, Kids of the international pre-school and Children with Intellectual disability (mantel retardation).*









## ஆபிரகாமும் இயேசுக்கிறிஸ்துவும்

ஆபிரகாம் தனது ஒரே மகனைத் தமக்குப் பலியிடும்படி கடவுள் கேட்டுக்கொண்டபோது அவரது கட்டளையை நிறைவேற்ற அவன் தயங்கவில்லை. நீண்டகால எதிர் பார்ப்பின்பின் அதுவும் கடவுளின் வாக்குத்தத்தத்திற்கமைய பிறந்த அம்மகனை கடவுள் ஏன் பலியிடக் கேட்கிறார் என்று அவன் கேள்வியெழுப்பவில்லை.

பின்னர் கடவுள் (தமது தூதன் மூலமாக) அவனிடம் " நீ கடவுளுக்குப் பயப்படுகிறவனென்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்" எனக்கூறி அவனையும் அவன் சந்ததியையும் ஆசீர்வதிக்கும்போது "உன் சந்ததியின் மூலம் பூமியிலுள்ள சகல இனத்தவரும் ஆசீர்வதிக்கப் படுவார்கள்" என்ற ஆசீர்வாதத்தையும் கொடுப்பதைக் காண்கிறோம். (ஆதியாகமம் 22:18) இவ்வாறு சகல இனமக்களும் கடவுளுடை ய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தை அவர்களுக்கு வழங்கவேண்டிய பொறுப்பைக் கொண்டிருந்த் இஸ்ரயேல் மக்கள் அப்பொறுப்பிலிருந்து தவறிவிட்டனர். சகலஇனமக்களை மட்டுமல்ல காலங்காலமாக அவர்களருகே அவர்களோடு வாழ்ந்து வந்த மக்களைக்கூட புறஜாதியார் என்று ஒதுக்கி அவர்களைக் கடவுளுக் குத் தூரமானவர்களாகவே வைத்திருந்தார்களேயன்றி கடவுளின் ஆசீர்வாதங்களை அவர்களும் பெற்றுக்கொள்ள எவ்வித முயற்சியும் எடுக்காதவர்களாகவே இஸ்ரயேல் மக்கள் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட அந்த வாக்குறுதி இயேசுகிறிஸ்துவினால் நிறைவேறுவதைக் காண்கிறோம். இஸ்ரயே ல்மக்கள் எதிர்பார்த்த மேசியாவாக இயேசுகிறிஸ்து இருக்கவில்லை. அதாவது அவர்களது சுயநல சிந்தைக் கமைந்தவராக - இஸ்ரயேலரை மட்டும் மீட்பவராக- புறஜாதியினரைத் தண்டிப்பவராக- இஸ்ரயேலரை மட்டும் ஆசீர்வதிப்பவராக- இஸ்ரயேலுக்கு எதிரான ஆட்சியாளரையும் மக்களையும் அழிப்பவராக அவர் இருக்கவில்லை. மாறாகத் தம்மி ல் நம்பிக்கை வைப்பவர் எவரும் நிலையான மெய்வாழ்வை அடைவர் என்ற உறுதிமொழியோடு கிறிஸ்துவின் பணி காணப்படுகிறது. (யோவான் 8:51) ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட அவ்வாக்குறுதி இயேசுகிறிஸ்துவி ன் ஊழியத்தினால் நிறைவேறுகிறது. ஆபிரகாமுடன் பேசிய அதேகுரல்தான் இன்று இயேசுகிறிஸ்துவின்மூலம் பேசுகிறது.

இஸ்ரயேல் மக்களைப் போலவே நாமும் கிறிஸ்துவின் நற் செய்தி நமக்குமட்டுமே உரியது என்று நினைக்கிறோமா? நிலையான மெய்வாழ்வுக்கு நாமே ஏகபோக உரிமையாளர்களென வாழ்கிறோமா? இயேசுகிறிஸ்துவை அறிந்த- உணர்ந்த- அவரது அன்பைச் சுவைத்த- நாம் தனிநபர்களாகவும் திருச்சபையாகவும் மற்றவர்களுக்காகவும் மற்றவர்கள் நிலையான மெய்வாழ்வுக்கு வழிநடத்துபவர்களாக வாழ்கிறோமா? இறையரசின் நோக்கத்தை- பண்புகளை உணர்ந்த பிள்ளைகளாக வாழ்கிறோமா? பிறரோடு பகிர்ந்துவாழும் வாழ்வை, பிறருக்காக ஜெபிக்கும் வாழ்வை, வாழ்கிறோமா? சிந்திப் போம்!

*(கடந்த 25.3.2013 அன்று கொழும்புத் திருச்சபையின் பரிசுத்தவாரத்தியானத்தில் உதவி ஊழியர் சகோ தரர் வீ. டேவிட் நிருஷிகன் ஆற்றி ய அருளுரையின் சாரம். அடுத்துவரும் நாட்களில் சாலோமோனும் இயேசுக்கிறிஸ்துவும், யோனாவும் இயேசுக்கிறிஸ்துவும் ஆகிய விடயங்களில் தியானங்கள் நடைபெறுமெனச் சபைப்போதகர் அருட்திரு ரீ. தேவனேசன் அறிவித்தார்.)*

(பீ.என்.ஜே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

## கிறிஸ்தவம் - ஐரீன் ஜீவநாயகம்

எல்லா மனிதரின் இதயத்திலும் கடவுளைத் தேடும் வாஞ்சை உண்டு. அதுதான் சமயம். பலர் கடவுளை அறியாமல் பயத்துடன் பலிகளைச் செலுத்தி வணங்கி வேண்டிக்கொள்கிறார்கள்.

ஆனால் கிறிஸ்தவம் ஒரு சமயம் அல்ல. கடவுளே நம்மைத் தேடி வந்து எங்களுடன் உறவு கொள்ள விரும்புகிறார். ஏனென்றால் அவர் நம்மைத் தமது சாயலில் பண்டத்ததால். ஆகவே கிறிஸ்தவம் ஒரு உறவு. (தொடர்பு, சம்பந்தம்) என்றே கூறலாம்.

எமது தெய்வம் மாத்திரமே மனிதனுடைய பாவ இருதயத்தை நன்றாக அறிந்துள்ளார் ஏரேமியா 17:9-10. ஆகவே, அந்தப் பாவத்தின் பிரச்சனையைத் தீர்க்கவும் அவரே வழியையும் கொடுத்துள்ளார். இதுதான் எம் நற்செய்தி (யோவான் 3:16.)

மனிதனின் நிலை எவ்வளவு பாரதூரமானதென்பதை அவர் அறிந்ததால் தன்னால் கொடுக்கக்கூடிய மிக உயர்ந்த பலியைச் செலுத்தி மனிதரில் வைத்திருக்கும் அன்பை வெளிப்படித்தியுள்ளார்., உலக தோற்றத்திற்கு முன்னமே திட்டமிட்டார். வெளி. 13:8. அதற்கு அடுத்த வசனத்தில், 13:9 'காதுள்ளவன் கேட்கக்கடவான்' என்று கூறப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் இரு சொற்கள் உண்டு. (hear and listen) நாம் கேட்பதைக் கீழ்படிவதையே இங்கு கூறப்பட்டுள்ளது. எல்லாருக்கும் காதிருந்தாலும் கேட்ட வார்தைகள் இருதயத்தில் பதிவதில்லை. மேலும், தேவன் தம்மை அறிபவர்களையும் உலகதோற்றத்திற்கு முன்னமே அறிந்துள்ளார். எபேசியர் 1:4.

பாவத்தில் மனிதன் மரித்தால் நரகத்திலேதான் நித்தியமாக வாழ நேரிடும். இயேசு பரலோ கத்தைப்பற்றி 3 தடவைதான் கூறியுள்ளார். ஆனால் நரகத்தைப் பற்றியோ 14 தடவை கூறியுள்ளார். இந்த உண்மையை பலர் பிரசங்கிப்பதில்லை. இயேசுக்கிறிஸ்து இவ்வளவாய் ஏன் பாடனுபவித்தார்? நம்மை மீட்க இலகுவான வழி இல்லையா? எமது பாவத்தின் பாரத்தை இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஆதியாகமம் 3:15ல் தேவன் சொன்ன வார்த்தை கலாத்தியர் 3:16ல் நிறைவேறியதைக் காண்கிறோம். சந்ததி என்றுசொல்லு 'வித்து' என்று கூறப்பட்டுள்ளது. ஆண் மகனின் வித்து அல்லாமல் கன்னி மரியின் வித்தைக் குறிக்கிறது. ஆபிரகாமின் வித்துக்கள் அல்லாமல் வித்து கிறிஸ்துவையே குறிக்கும். மேலும் பழையேற்பாட்டில் தீர்க்கதரிசிகள் பல தடவையாக இயேசுதான் தேவ ஆட்டுக்குட்டி என்பதை திடப்படுத்தியுள்ளார்கள்.

நாம் சிலுவையையும் மரணத்தையும்தியானிக்கும்இந்த நாட்களில், எமது தேவனையும் அவருடைய திட்டத்தையும் மக்களுக்கு விளங்கப் படுத்தல் வேண்டும். இயேசுவின் பெருமையையும் விளக்க வேண்டும். அவரின் உயிர்தெழுதலின் கருத்தையும் மகிமையையும் மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும். அது ஒரு கட்டுக் கதை அல்ல. பல வகைகளிலும் ஆதாரப்படுத்தப் பட்ட செயல்.

எபிரேயர் 2ம் அதிகாரத்தில் இப்படிப்பட்ட இரட்சிப்பை ஜாக்கிரதையுடன் பெற்றுக் கொள்ளும்படி பவுல் அப்போஸ்தலன் சொல்லியுள்ளார். 2:4 - 'தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருபோமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்.'

இயேசு உயிர்த்தெழுந்து மரணத்தை ஜெயித்தார். ஆகவே நாம் அவரை நம்பினால் மரணத்திற்குப் பயப்படத்தேவையில்லை. 2:14-15. 'மரணத்திற்கு அதிகாரியானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத் திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும் படிக்கு அப்படியானார்.' (2 கொரி 5:8)

எங்களை தனிமையாக விடாமல் பரிசுத்தாவியானவரை அனுப்பி எங்களைத் தேற்றுகிறார். பரிசுத்தவாழ்வுக்கு அவர் அவசியம். எங்களில் வாசம் பண்ணி எங்கள் மனச்சாட்சியை சுத்தமுள்ளதாக்குகிறார். 1 கொரிந்தியர் 1:12 - 'கபடமில்லாத மனச்சாட்சி' அதுவே எங்கள் சந்தோஷமும் புகழ்ச்சியுமாய் இருக்க வேண்டும். மேலும் தேவனின் வலது பாரிசத்தில் இருக்கும் பிரதான ஆசாரியராகிய இயேசுக் கிறிஸ்துவும் எங்களுக்கு வேண்டுதல் செய்கிறார். எபிரே. 7:25 அவர் ஒருவரே இரட்சிக்க வல்லவர். அல்லேலூயா!

## உண்மையான ஜெபம்

(15ம் நூற்றாண்டில் வாழ்ந்த FRANCOIS FENELONT என்பவரின் எழுத்துக்களிலிருந்து எடுத்து மொழி பெயர்க்கப்பட்டது.)

தேவனில் அன்பு கூருவதே உண்மையான ஜெபம். ஜெபமானது பல சொற்கள் அடங்கியது அல்ல. ஏனெனில் எங்கள் இருதயத்தின் துடிப்பை தேவன் முன்னமே அறிந்திருக்கிறார். உண்மையான ஜெபம் ஆவியினூடாகச் செயல் படவேண்டும். ஆகையால் நாம் உண்மையாக வாஞ்சிக்கிறவற்றிற்கு மாத்திரம் ஜெபிக்க வேண்டும். எங்கள் உள்ளான வாஞ்சையை நாம் அறியாவிட்டால் எங்கள் ஜெபம் ஏமாற்றலாக அமையும். நாம் நாளாந்தம் ஜெபத்தில் தரித்திருக்கலாம். ஆனால் எங்கள் உள்ளான வாஞ்சையால் ஜெபிக்காவிட்டால் அதில் ஒரு பயனும் இராது.

உண்மையான தேவ அன்பு எங்கள் இருதயத்தில் இருக்குமானால், எங்கள் வாஞ்சையும் தெளிவாய் இருக்கும். அப்பொழுது நாம் இடைவிடாமல் ஜெபிப்போம். எங்கள் ஆவியின் ஆழத்தில் இருக்கும் அன்பு, நாம் பலவித வேலைகளில் ஈடுபட்டு இருந்தாலும், அந்தரங்கத்தில் ஜெபித்துக்கொண்டுதான் இருக்கும். எமது வாழ்க்கைக்கு தேவையானதை மட்டுமே தேவனிடம் வேண்டிக்கொள்ளுவோம். தேவன் எங்கள் பலவீனத்தைப் பார்க்கிலும், உண்மையான இருதயத்தையே காண்பர்.

எம்மில் உள்ள தேவ அன்பு எங்கள் குறைபாடுகளை நீக்கி எம்மைப் பட்சிக்கும் தீயினால் சுத்தம் செய்யும். எம்மில் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் தேவ சித்தப்படி மாத்திரமே வேண்டுதல்களை ஏறெடுப்பார். நாம் வேறுகடமைகளில் ஈடுபட்டு இருக்கும் போதும் தேவனுக்கு ஏற்ற வாஞ்சை எங்கள் உள்ளத்தில் அணையாத தீ போல எரிந்து கொண்டிருக்கும்.

ஏனென்றால், தேவனுடைய சிம்மாசனத்திற்கு முன் உள்ள தீ அணைவதில்லை. ஆகவே எங்கள் இரகசிய ஜெபங்கள் எப்போதும் அவர் செவிகளைக் கிட்டும்.

இப்படியான ஜெபவாழ்விற்கு இரு காரியங்கள் முக்கியம். தேவனைச் சந்திக்கும்படி ஒரு நேரத்தை நாம் தள்ளி வைக்கவேண்டும். மேலும் நாள் முழுவதும் எங்கள் எண்ணங்களை அவர் முகமாய் அடிக்கடி திருப்ப வேண்டும். இரண்டாவதாக எம்மை தேவ சன்னிதானத்திலிருந்து பிரிக்க கூடிய காரியங்களையும், மக்களையும் விலக்க வேண்டும்.

எங்கள் அன்பின் முதன்மையான கனி தேவ சித்தத்தை எமது சித்தமாக்குவதே. அவருடைய சித்தப்படி கீழ்படியாவிட்டால் நாம் எம்மையே நேசிக்கிறதாக அமையும்.

எமது வாழ்வில் முக்கியமான அலுவல்களை செய்து முடித்த பின்தான் வேறு காரியங்களில் ஈடுபட வேண்டும். தேவனோடு உறவாடும் நேரத்தைப் பின்போடுவோமானால் எம்மை ஏமாத்துகிறவர்களாய் இருப்போம். எங்களுடைய உணர்ச்சிகள் தேவ அன்பைத் தடை செய்யாமல் காப்பாற்ற வேண்டும்.

தேவனை சந்திக்கும் நேரம் ஒரு சந்தோஷமற்ற கடமையாய் இருந்தால் நாம் தேவனை அறியாதவர்கள் என்றே கணக்கிடலாம். வேதாகமத்தை படிப்பதால் நாம் தேவனை கண்டடையலாம். வேதவசனத்தினூடாக தேவன் நம்முடன் பேசுவார். அவர் சன்னிதானத்தில் ஸ்தோத்திரத்தோடு வருவோமானால், அவர் எம்மைச் சந்திக்க தவறமாட்டார்.

## அதிர்ஷ்டம்

அந்தச் சிறுவன் நடந்து போய்க் கொண்டிருந்த போது சாலையில் நூறு ரூபாய் நோட்டு கிடப்பதைப் பார்த்தான்.

அன்று முதல் ஏதும் தரையில் கிடக்கிறதா என்று பூமியைப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

அடுத்த அறுபது வருடங்கள் அப்படியே இருந்தான்.

அவனுக்குக் கிடைத்தவை 768 ரூபாய், 2 மோதிரங்கள், 3 கொலுசுகள்.

ஆனால் அவன் இழந்திருந்தவை, 21900 சூர்யோதயங்கள், 630 வானவில் காட்சிகள். ஆயிரக்கணக்கான பூக்கள், பல்லாயிரம் குழந்தைகளின் புன்னகை முகங்கள்.

வாழ்க்கையைத் தொலைத்தவன் மீட்பதற்கு வாய்ப்பே இல்லை.

அதிர்ஷ்டம் காலை இடறினால் மட்டும் குனிந்து பாருங்கள்.

இல்லையென்றால் வாழ்க்கையைப் பாருங்கள்.

வாழ்ந்து பாருங்கள்.

## சிந்தனைக்கு சில வரிகள்

(படித்துச் சுவைத்தவை)

1. தம் மனம் மாறியோர் பிறர் மனம் மாற்றுவார்
2. உன்னைத் தேடி வரும் புகழே புகழ் மற்றதை இகழ்
3. பற்றிக்கொள்வது சுயநலம், பகிர்ந்துகொள்வது பிறர் நலம்
4. அடுத்தவர்க்கு அன்பு, ஆண்டவர் தேடும் பண்பு
5. தாயின் அன்பு, வற்றாத நீரூற்று
6. நல்ல மனிதனை நம்பு அல்லாதோர் வம்பு
7. தூண்டுவோர் போடும் தூண்டிலில் சிக்கிக்கொள்ளாதே

## விவிலிய விடுகதைகள்

உன்னாச் சொத்து மண்ணாய்ப் போச்சு<br>
பிறர் சொத்தை கவர்ந்ததால்<br>
உயிரே போச்சு -அவன் யார்?<br>
விடை: ஆகாப் - 1 இரா 21:139.

மழையோ மழை<br>
கொட்டோ கொட்டென கொட்டும் மழை<br>
குடையில்லாத காரணத்தால்<br>
அரையைக் கட்டிக் கொண்டு<br>
ஓடினான் -அவன் யார்?<br>
விடை: எலியா - 1 இரா 18:45,46.

நஷ்டம் என்று விட்டு விட்டு<br>
குப்பை என்று தூக்கிப் போட்டு<br>
இயேசுவினால் பிடிக்கப்பட்டு<br>
இலக்கை நோக்கி ஓடினார் -அவர் யார்?<br>
விடை: பவுல் - பிலி 3:11-14.

வருடங்கள் மூன்று சுற்றி வந்து<br>
வருமானம் ஏதும் இல்லை என்று<br>
வருடம் ஒன்றைக் கூட்டிக் கொடுத்து<br>
வருவேன் என்று திரும்பி சென்றான்<br>
-அவன் யார்?<br>
விடை: தோட்டக்காரர்<br>
- லூக் 13:6-9.

அளந்து பார்க்க அளவுகளில்லை<br>
அறிந்துக் கொள்ள புத்தியுமில்லை<br>
- ஆனால்<br>
இயேசு உலகினில் வந்ததால்<br>
இதனை பார்க்க முடிந்தது -அது என்ன?<br>
விடை: அன்பு - எபே 3:18,19.

## இறையரசின் தலைவர் உயிர்த்தெழுந்தார்

திறந்த கல்லறையில்<br>
வான தூதனின் தரிசனம் - இனி<br>
எமக்கு விமோசனம்

சிலுவையே - நீ<br>
எங்கள் தலைவனின் உயிரை<br>
எடுத்தாய்<br>
ஏரோதுக்களின் துணை கொண்டு<br>
ஆனால் இயேசு உயிர் விட்டார்.

சிலுவையை சிவப்பாக்கியது<br>
இயேசுவின் குருதியல்ல - அது<br>
எங்களின் பாவமே

சுதந்திரமான உணர்வு<br>
சந்தோஷ வாழ்வு<br>
எல்லாம் உயிர்த்துவிட்டது<br>
இயேசு உயிர்த்துவிட்டார்

இறையரசின் இலட்சியத்<br>
தலைவர் அவர்<br>
இயேசு உயிருடன் - அவர்<br>
இன்றும் என்றும் எப்பொழுதும்<br>
எம்முடன் இருப்பார்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Theology of Conflict 3

Theology of Conflict in the perspective of Jeremiah can be classified into three. They are as follows.

1. Conflict in Calling
2. Conflict in Ministry
3. Conflict in Life.

## Conflict in Calling

The words addressed to the prophet in the act of his Calling characterize well enough what his ministry is to be in the years to come; "he is to pluck up and break down, to destroy and to overthrow, but also to build and plant(1:10). Out of 6 verbs 4 implies to announce judgment; the other two implies/proclaims an alternative destruction. Here we see Conflict begins from "Jeremiah is Calling."

A mission like that of Jeremiah must necessarily have made many enemies and the prophet is presented as a person who had to suffer in a particular way. Twice we hear of Conspiracies against him (11:19f, and 18:1f) with the aim of eliminating him. From these passages we can deduce that there were nests of opposition in his own village which did not hesitate to resort to murder to do away with an inconvenient preacher. Another time he is brought before a tribunal on a charge of blasphemy following the announcement of the destruction of the temple (Jerusalem), a crime which carries the death penalty. The superstition and corruption which he saw in the country side were not limited to it, but extended to the ruling class in the capital, a well-educated group(5:1f). The same sin had pervaded among Judah until Jesus was removed from his bodily presence in Palestine.

## Conflict in Ministry

On the accession of Jehoiakim both the political and the religious situation deteriorated rapidly, Jehoiakim must have reigned unscrupulously on the political level while at a religious level he seems to have wanted to annual Josiah's reform. Jeremiah must have wanted to preach against these elements in his speech in t5he temple (7:26), and his position immediately become an affair of state. The announcement of the destruction of the temple put the prophet in a position of being within a hair's breadth of the death sentence.

The real break with his fellow citizens took place after a symbolic action of potter's flask, a sign of the forth-coming breaking of Judah by divine judgment. As the result of this symbolic action directed against Judah, itself, Jeremiah was imprisoned, put in the stock and flogged (20:1f); he was forbidden to enter the temple. The void around him increased to the people, he seemed to be a blasphemer and to the politicians a defeatists and a political traitor; it was better for everyone not to be seen in his company.

## Conflict in Life

In 588 B.C Nebuchadnezzar again moved against Jerusalem, laying siege to it for a second time. Jeremiah who was considered a potential traitor was subjected to all kind of vexations and was finally accused of communicating with the enemy. He was imprisoned in an empty cistern where he would have certainly died, had not the king given help to him in secret (Chapters 37-39). The king did not have courage or perhaps even the material means for helping the man under his protection more effectively. Jeremiah was freed on the storming of the city by the Babylonians, the conquerors treated him with respect and allowed him to stay together with the governor Gedaliah to begin the reconstruction. However, a conspiracy organized by the nationalist elements and outlawed soldiers did away with the governor and the rebels took the prophet with them to Egypt (Chap 42-43). It was here that he died wothout having ceased to preach. According to a legend Jeremiah too died a martyr's death.

## Conflict in Personality

Jeremiah shares with his predecessors his ministry as a herald of Yahweh to his people, even if he was almost always ignored. He seems to have been unwilling to fulfill this function. Prophet Isaiah boldly says "Here am I, send me...." the response to Yahweh's question. At this juncture one can compare Jeremiah's position to Isaiah. Whether anyone is prepared to go in Yahweh's name. But Jeremiah feels continual wavering in his personality. There seemed to be perplexity and reticence was to continue during ministry.

There are many instances in which Jeremiah feels that violence has been done to his own will and that his power of decision has been unjustly nullified, i.e., he has been deduced or deceived. Jeremiah has been a passive instrument in God's hand, a person who goes his own way doing duty without looking either to right or to left. On the contrary, he struggles to understand he does not accept anything without being convinced. He seeks to halt the disaster which is coming in future on his people (20:7f). There is thus a marked tension between the personality of the prophet and his own ministry as well as between his own inclinations and his own vocation. Jeremiah is a man of honest, hard-working and quiet in his everyday life; ready to avoid any violent emotion in practice; but he saw himself compelled to act continually against his own character.

## Conclusion

Conflict is part and parcel of idealism and realism of human life. The life and ministry of Prophet teach that conflict is unavoidable. Yahweh shows the ways and means to his servants to do his willingness in the midst of conflict. Success in ministry is rooted in pool of conflicts. Those who can dive into such pools can perform their ministry very successfully. Those who can't.............

End

REV.J.THEVARUDSELVAM

## THE WORD OF GOD - Ms. IRENE JEEVANAYAGAM

The word Bible comes from the word Biblios which means 'library'. It is made up of 66 books and the stories include History, War, Love, Political intrigue, Murder, Assassination, Adultery, Suicide, Poetry, Doctrine, Prophecy, Faith, Hope and Charity.

The Jews and later the Christians also were referred to as 'The People of the Book' by people of other religions. They understood that obeying what this book says is important to the Jews and Christians. The reason being the authority behind the Book. They are words from God Almighty, the Creator of everything. The content of the Book was given by God Himself to human beings to be written down. For example, in the book of Ezekiel alone the phrase 'Word of the LORD' appears 54 times! 2 Timothy 3:16 and 2 Peter 1:21 also confirm the fact that God is the authority behind everything in the Bible.

The books of the Bible were written down by 40 writers over a period of 1500 years. These writers came from different backgrounds. They were from diverse cultures and levels of education. Some were kings, philosophers, scholars, peasants, tax collectors, shepherds, poets, military leaders, harpists, a cowman and a drummer (Asaph who wrote a few Psalms)

The books were written in three different languages, Hebrew, Aramaic and Greek; from three continents, Asia, Europe and Africa (little bit in Egypt). They were also written from palaces, wilderness, hillsides, prisons and various situations of persecution and exile.

The story is from eternity past to eternity future. We are privileged to be in the middle (but closer to the end of the present era as predicted in the Bible).

The amazing unity of the unfolding theme is nothing short of the miraculous. The theme is the creation of man, the fall, the redemption and the future restoration. As Milton wrote the topic is 'Paradise Lost' and 'Paradise regained'.

The detailed genealogies included in the books of the Bible reveal how much our God loves and relates to His people as individuals.

Statements from Spiritual Saints of the past about the Word of God:

A.B. SIMPSON – 'God has hidden every precious thing in such a way that it is a reward to the diligent, a prize to the earnest, but a disappointment to the slothful soul. All nature is arrayed against the lounger and the idler. The nut is hidden in its thorny case; the pearl is buried beneath the ocean waves; the gold is imprisoned in the rocky bosom of the mountains; the gem is found only after you crush the rock which encloses it; the very soil gives its harvest as reward to the labouring farmer. So truth and God must be earnestly sought.'

JOHN STOTT– 'We must daily soak ourselves in the Scriptures. We must not study as through a microscope, the linguistic minutiae of a few verses, but take our telescope and scan the wide expanses of God's mind, assimilating its grand theme of divine sovereignty in the redemption of mankind.'

C.H.SPURGEON – 'It is blessed to eat into the very soul of the Bible until, at last, you come to talk in scriptural language and your language and your spirit is flavoured with the words of the Lord, so that your blood is Bibline and the very essence of the Bible flows from you.'

MARTIN LUTHER – 'The Bible is alive, it speaks to me; it has feet, it runs after me; it lays hold on me.'

AUGUSTINE – 'If you believe what you like in the gospel and reject what you do not like, it is not the gospel you believe, but yourself.'

JOHN BUNYAN – 'This book will keep you from sin or sin will keep you from this book.

A.W.TOZER – 'The Bible is a supernatural book and can be understood only by supernatural aid. It is not addressed to just anybody. Its message is directed to a chosen few. Whether these few are chosen by God in a sovereign act of election or are chosen because they meet certain qualifying conditions I leave to each one to decide as he may.....The secret of the Lord is with them that fear Him. The impenitent heart will find the Bible but a skeleton of facts without flesh or life or breath.'

## Meeting the Easter Bunny

On Easter morn at early dawn
before the cocks were crowing
I met a bob-tail bunnykin
and asked where he was going.
"Tis in the house and out the house
a-tispy, tipsy-toeing,
Tis round the house and 'bout the house
a-lightly I am going."
"But what is that of every hue
you carry in your basket?"
"Tis eggs of gold and eggs of blue;
I wonder that you ask it.
"Tis chocolate eggs and bonbon eggs
and eggs of red and gray,
For every child in every house
on bonny Easter day."
He perked his ears and winked his eye
and twitched his little nose;
He shook his tail -- what tail he had --
and stood up on his toes.
"I must be gone before the sun;
the east is growing gray;
Tis almost time for bells to chime."
--
So he hippety-hopped away.

~By Rowena Bennett, 1930~

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


PUBLIC LIBRARY
JAFFNA




அமெரிக்கன் மிசன் திருச்சபை வாலிபர்களாகிய நாம் எமது திருச்சபை வளர்ச்சிக்காகவும், எமது வாலிபர்களின் ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்காகவும் இந்த வருடத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். இதன் முதற்கட்டமாக கடந்த 26.01.2013ம் திகதி குடத்தனை பகுதியில் ஒரு சுவிசேஷ கூட்டம் ஒன்றையும் 27.01.2013 அன்று வாலிபர்களுக்கான ஞான ஒடுக்க நிகழ்வு ஒன்றையும் நடாத்தியுள்ளோம். இதில் 57 வாலிபர்கள் கலந்தகொண்டதுடன் சுவிசேஷக் கூட்டம் நடைபெற்ற இடத்தில் 30இற்கு மேற்பட்ட (பெரியவர்கள், சிறியவர்கள்) கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் எமது பணிகளை சிறப்பாக செய்வதற்கு உங்களுடைய ஊக்கமான ஜெபங்களையும், ஆதரவுகளையும் வேண்டி நிற்கின்றோம்.


CACM - யாழ் பிராந்திய வாலிபர்கள்
















CACM யாழ்.பிராந்தியத்தினரால் நடாத்தப்பட்ட 2013ம் ஆண்டுக்கான ஈஸ்டர் பஜனை ஏழாலை தெற்குத் திருச்சபையில் சிறப்பாக நடைபெற்றது. பிராந்தியத்தின் பல சபைகளைச் சேர்ந்த அங்கத்தவர்களும் பாடல்களை பயிற்சி பெற்று பாடினர். திருச்சபை குருவானவர் அருட்திரு.ஜீ.டி.மைனசீலனின் ஆரம்ப செபத்தோடும் REB இயக்குனர் அருட்திரு. ப.தேவமித்திரனின் வரவேற்புரையோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின.அன்றைய நாளுக்குரிய அருளுரையினை தலைவர் அருட்திரு. ஈனோக் பு.புனிதராஜா அவர்கள் ஆற்றினார். பாடல்கள் அனைத்தும் மிகவும் பக்திபூர்வமாகவும் அர்த்தம் பொதிந்ததாகவும் அமைந்திருந்தது. [illegible] இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



## ஆசிரியர் கருத்தரங்கு

வன்னிப் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கல்விக் கருத்தரங்குகள் முறிகண்டி புனித பவுல் ஆலய வளாகத்திலும், கிறிஸ்து அரசர் ஆலயம் கிளிநொச்சியிலும் மிகச்சிறப்பாக திட்ட இணைப்பாளர் திரு.த.யூதராஜா தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் CACM வன்னிப் பிராந்திய பொருளாளர் திரு. போல் நேசராஜா (G.S) அவர்கள் கலந்துகொண்டு நிதி முகாமைத் துவத்தைக் குறித்து ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இவ் ஆசிரியர்களுக்கு மட்டக்களப்பிலும் கற்பித்தல் செயற்பாட்டிற்கான பயிற்சிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## முரசுமோட்டை முன்பள்ளி

கடந்த கால யுத்தத்தினால் முற்றாக சேதமடைந்த முரசுமோடடை முன்பள்ளியை திட்ட முகாமையாளர் கலாநிதி. தர்ஷன் அம்பலவாணரின் அயரா முயற்சியினால் கட்டிடத்தின் சிதைவுகள் திருத்தப்பட்டு கூரை வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. இதன் பின்னர் கொழும்புத் திருச்சபையின் அங்கத்தவர்களாகிய திரு. றோய் விஜயரட்ணம், திருமதி. சாந்தி நந்தகுமார், திருமதி. வசந்தி இராஜரட்ணம் ஆகியோர் வெளிநாடுகளில் வாழும் தங்கள் உறவினர் மூலம் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்துள்ளார்கள். இந் நிலையத்திற்கான வர்ணப்பூச்சு இக் கிராமத்தில் வாழும் திருமதி. முருகானந்தன் சுபாசினி அவர்காளால் செய்து கொடுக்கப்பட்டது. இச் சகோதரியின் பிள்ளையும் இங்கே பராமரிக்கப்பட்டு வருகிறார்.

## நிரந்தர நியமனம்

கடந்த பல ஆண்டுகள் வன்னிப் பகுதியில் திட்ட இணைப்பாளராக பணியாற்றிய திரு.த.யூதராஜா அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் நிரந்தர நியமனம் பெற்ற வன்னிப்பிராந்திய திட்ட இணைப்பாளராக கடமையற்றிவருகின்றார். இவர் கடந்த காலங்களில் KNH நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஆண்கள் இல்லத்தில் பாதுகாவலராக இணைந்து கொண்டார். யுத்தத்தினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேசிய கிறிஸ்தவ சங்கத்துடன்(NCC) இணைந்து மீள் கட்டுமானப் பணிகள் பல செய்தவர். இன்னும் Y.M.C.A வடமாகாண பொருளாளராகவும் பணியாற்றி வருகின்றார். இதம் உளவளத்துணை நிலையத்தின் செயலாளராகவும் புதுமடம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகவும் செயற்படுகின்றார். இவர் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினால் நடாத்தப்படும் ஆலோசனைப்பணி பயிற்சியைப் பெற்று சிறுவர் முன்பள்ளிகள், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள், மாலை நேர வகுப்புகள் போன்றவற்றை சிறப்பாக வழிநடாத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அன்பளிப்பு

முரசுமோட்டை முன்பள்ளிக்கு விஜயம் செய்த ரூத் மிஷன் இயக்குனர் செல்வி. J. கிளாடிஸ் நிலைய பாவனைக்காக ஒரு அலுமாரியை வாங்கிக் கொடுத்துள்ளார். இவர் முன்பு ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் முன்பள்ளிகளுக்கும் இவ்வாறான உதவிகளை செய்துள்ளார்.

## திருமறைப்படிப்பு

வன்னிப் பிராந்திய குருமாருக்கான தவக்கால திருமறைப் படிப்பனை திருமதி.வசந்தி இராஜரட்ணம் நடாத்தினார். இத் திருமைப்படிப்பு கிளிநொச்சி கிறிஸ்து அரசர் ஆலயத்தில் பிராந்தியத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வன்னி ப்பிராந்திய குருமார் அனைவரும் இதில் கலந்து கொண்டார்கள்.

## புதிய கட்டிடம்

முறிகண்டி புனித பவுல் முன்பள்ளிக்கு பல இலட்சம் ரூபா செலவில் ஒரு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தில் முன்பள்ளி சிறார்களின் கல்வி நடவடிக்கைகள், ஞாயிறு வழிபாடு, திருமறை ஆய்வு, சுய உதவிக்குழுக்களின் கூட்டங்கள் போன்றன சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இக் கட்டிடத்துக்கு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை முழுமையான நிதியுதவியினை பெற்றுத் தந்துள்ளனர்.

## மாலை நேர வகுப்பு

முரசுமோட்டை கிராமத்தில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை ஆண்டு 1,2,3ம் மாணவர்களுக்கு மாலை நேர வகுப்பை ஆரம்பித்துள்ளது. சிறார்களுக்கு ஆரம்பக் கல்வியை சிறப்பான முறையில் ஊட்டவேண்டும் என்பது தமது நோக்கம் என CACM வன்னிப் பிராந்திய செயலாளர் அருட்திரு. D.S. மதியாபரணம் அவர்கள் குறிப்பிட்டார்.
இவ் வகுப்பில் 32 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர்.

## கோணாவில் திருச்சபை

வன்னிப் பிராந்தியத் திருச்சபைகளில் ஒன்றாகிய கோணாவில் புனித தோமா ஆலயம் யுத்தத்தினால் சிதைவடைந் திருந்தது. இவ் வாலயம் அண்மைக்காலத்தில் புனரமைக்கப்பட்டு வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. முன்பு நடைபெற்று வந்த முன்பள்ளியும் ஆலய வளாகத்திலேயே நடைபெற்று வருகின்றது. அருட்திரு. மா.ஜெயானந்தராஜா இப்பகுதியில் பணியாற்றிவருகின்றார்

## கட்டிட திறப்பு விழாவும் விளையாட்டு நிகழ்வும்









1996 - 97ம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தத்தால் முற்றாக சேதமடைந்த முரசுமோட்டை மிஷன் வைத்தியசாலை வளாகத்தில் இயங்கி வந்த முன்பள்ளி கட்டிட புணரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்த பின் அண்மையில் திறப்பு விழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

வன்னிப்பி ராந்திய செயலாளர் அருட்பணி. D.S.மதியாபரணம் தலைமையில் நடைபெற்ற விழாவில் விருந்தினர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டு பின்னர் துதிப்பாடல் ஒன்று பாடிய பின் திருச்சபைப் பேரவைத் தலைவர் வண.ஈனோக் பூ.புனிதராஜா அவர்கள் புணரமைக்கப்பட்ட கட்டிடத்தின் நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்ததோடு நாடவை வெட்டி கட்டிடத்தை திறந்து வைத்தார். வருகை தந்த அனைத்து மக்களும் கட்டிடத்தின் உட்பகுதிக்குள் சென்றதும் பொழும்புப் பிராந்தியத் தலைவர் அருட்திரு.T.தேவநேசன் பிரார்த்தனை செய்து நிலையத்தை ஆசீர்வதித்தார்.

இந் நிகழ்வில் பேரவைச் செயலாளர் அருட்திரு. B.தேவதாஸ், பொருளாளர் திரு.வீ.மித்திரரஞ்சன், கொழுப்பு உதவி ஊழியன் சகோ.டேவிட் நிருஷிகன், அருட்திரு.அன்று ஜெயானந்தம், அருட்திரு. J. துரைரட்ணம், அருட்திரு. S. தேவகரன் ஆகியோரும் இந் நிலையத்தை நடாத்தி வருகின்ற கொழும்புத் திருச்சபையின் முதுவாலிபர் சங்கத்தின் தலைவி.சாந்தி பிரேமானந்தன் அங்கத்தவர்களாகிய திரு.றோய் விஜயரட்ணம், திருமதி. சாந்தி நந்தகுமார், திருமதி.டிலோ புனிதராஜா ஆகியோரும் திட்ட இணைப்பாளர் திரு.த.யூதராஜா மற்றும் அவரது பாரியார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிலைய கட்டிட திறப்பு விழாவைத் தொடர்ந்து நிலைய பிள்ளைகளின் 2013ம் ஆண்டிற்கான விளையாட்டு நிகழ்வு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகியது. இதில் சிறார்களின் கற்பித்தல் செயல்பாடுகளுடன் கூடிய விளையாட்டுக்கள் இடம்பெற்றன. இடைவேளை நிகழ்வாகிய 'இசையும் அசைவும்' மிகச் சிறப்பாக பலருடைய மனங்களையும் கொள்ளை கொள்ளும் அளவில் அமைந்தது.

விளையாட்டில் பங்கு கொண்டு முறையே 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றுக்கொண்ட சிறார்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிலைய சிறார்கள் யாவருக்கும் கொழும்புத் திருச்சபையின் முதுவாலிபர் சங்கத்தினரின் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. நிலைய ஆசிரியை திருமதி. சுதர்ஷினி சுதாகரன் நன்றி தெரிவித்தார்.

(D.S.M)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் உதயதாரகை பத்திரிகை ஆசிரியரால் யாழ்.வீதி ஆனைக்கோட்டை சந்தியில் அமைந்துள்ள ரூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 31-03-2013 அன்று வெளியிடப்பட்டது.